**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**
**TIRUVANNAMALAI.**
**OS. No.34/2010**
**DW1**

| | | |
|---|---|---|
| Name | : | நிர்மல் குமார் |
| Father's Name | : | கிஷன்லால்ஜெயின் |
| Village | : | |
| Taluk/ District | : | திருவண்ணாமலை |
| Caste | : | ---- |
| Calling | : | ---- |
| Religion | : | ---- |
| Age | : | 72 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.04.2026.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 3ம் பிரதிவாதி . எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மை என்றும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்று உறுதியிட்டு கூறுகிறேன். எனக்கு தமிழ் நன்றாக எழுதவும் படிக்கவும் தெரியும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன்.

**1.** திருக்கோவிலூர் ஆயில் மில்ஸ் கம்பெனியின் 31.03.2025 ஆண்டு முடிவிற்கான கணக்கு பட்டியல் **பி.வா.சா.ஆ.1**

பிரதிவாதி தரப்பில் 2010 கிரைய ஆவணம் பிரதிவாதி தரப்பு கிரைய ஆவணமாக தாக்கல் செய்ய முற்பட்டபோது மேற்படி ஆவணத்தை பற்றி பதிலுரையிலும் முதன்மை விசாரணை வாக்குமூலத்திலும் எதுவும் சொல்லவில்லை என்று வாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. அந்த ஆட்சேபனையை ஏற்றுக்கொண்டு மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்படவில்லை.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் தாயார் பெயர் பானிபாய். என் தந்தை பெயர் கிஷன்லால். வாதிகள் என் தந்தையின் 2வது தாரத்தின் பிள்ளைகள். வாதிகளின் தாயார் பெயர் பார்சிபாய். என் தாயார் பானிபாய் இறந்தபிறகுதான் என் தந்தை பார்சிபாயை திருமணம் செய்துகொண்டார். என்னுடன் பிறந்தவர்கள் கௌசல்யாபாய் என்கிற மூத்த சகோதரியும், மீனாபாய் என்கிற மூத்த சகோதரி ஆவார். கௌசல்யாபாய் தற்போது உயிருடன் இல்லை. பிரதிவாதிகள் 9 முதல் 15 வரை உள்ளவர்கள் கௌசல்யாபாயின் வாரிசுகள் என்றால் சரிதான். வாதிகள் தாக்கல் செய்த இந்த பாக வழக்கிற்கு கௌசல்யாபாய் என்ன பதிலுரை தாக்கல்

செய்தார்என்று எனக்கு தெரியுமா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 9 முதல் 15 வரை உள்ள பிரதிவாதிகள் தரப்பில் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அவர்கள் வாதிகளுக்கு தாவா சொத்தில் பாகம் அளிப்பதில் ஆட்சேபனை இல்லை என்றும் தங்களுக்கு ஒரு பாகம் வழங்க வேண்டும் என்று மேமோ தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 8ம் பிரதிவாதியான மதுக்கான் கிரானைட் பற்றி எனக்கு தெரியாது. 8ம் பிரதிவாதியாக மதுக்கான் கிரானைட் ஏன் வழக்கில் சேர்க்கப்பட்டார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட சொத்துக்கள் ஏதாவது மதுக்கான் கிரானைட் பெயரில் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்களை பற்றிய விவரம் எனக்கு தெரியும். வாதிகள் என் சொத்தில் பங்கு கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். என்னுடைய சொத்துக்கள் என்று நான் எதை சொல்கிறேன் என்றால் ராஜஸ்தானில் உள்ள சொத்து மற்றும் வியாபாரம். திருக்கோவிலூர் ஆயில் மில்ஸ்தான் வியாபாரம் என்று சொல்கிறேன். ராஜஸ்தானில் உள்ள சொத்து மட்டும்தான் என் பெயரில் உள்ளது. வழக்கு சொத்துக்களில் வேறு எந்த சொத்துக்களும் என் பெயரில் இல்லை. நான் திருக்கோவிலூர் ஆயில் மில்சில் ஒரு பங்குதாரர். "A" அட்டவணை சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள பெட்ரோல் பங்க் வியாபாரம் நிர்மல் எண்டர்பிரைசஸ் என்ற பெயரில் 1978–ல் இருந்து இருந்தது. என் தந்தை கிஷன்லாலுக்கு தமிழ்நாட்டிலும் ராஜஸ்தானிலும் எந்த வியாபாரமும் இல்லை. தமிழ்நாட்டில் மட்டும் K.K.JLS என்ற லாரி நிறுவனம் நடத்தி வந்தார். அவர் அடகு வியாபாரம் எதுவும் செய்யவில்லை. ஐஸ்பேக்டரி வைத்திருந்தார். நான் தாக்கல் செய்த பதிலுரையில் பத்தி 5ல் என் தந்தை அடகு வியாபாரம் சிறிய முறையில் திருவண்ணாமலையில் செய்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் அவர் செய்திருக்கலாம் எனக்கு தெரியாது. என் தந்தை 1997 ல் இறந்தார். நானும் என் தந்தையும் என் தந்தை இறக்கும்வரை ஒன்றாகத்தான் இருந்தோம் என்றால் 1975 –லேயே தனியாக சென்று விட்டேன். திருவண்ணாமலையில் அவர் வேறு இடத்திலும் நான் வேறு இடத்திலும் தனித்தனியாகத்தான் வசித்து வந்தோம். நான் தாக்கல் செய்த பதிலுரையில் நான் தனியாக இருந்த முகவரியும் என் தந்தை இருந்த முகவரியும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நானும் என் தந்தையும் தனித்தனியாக இருந்தோம் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதலில் "A" அட்டவணை வியாபாரம் இன்டோ பர்மா பெட்ரோலியம் கம்பெனி என்று அழைக்கப்பட்டது. அதற்கு உரிமம் யார் பெயரில் வழங்கப்பட்டது என்றால் " நிர்மல் என்டர்பிரைசஸ் " என்ற நிறுவனத்தின் பெயரில் வழங்கப்பட்டது. அதன் ஒரே ஒரு உரிமையாளர் நான்

இன்டோ பர்மா பெட்ரோலியம் கம்பெனி என் பெயரில் வழங்கப்பட்ட உரிமம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்தியன் ஆயில் நிறுவனம் எனது பெயரில் வழங்கிய உரிமையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். "A" அட்டவணை சொத்தில் காண்பிக்கப்ட்ட வியாபாரம் என் தகப்பனார் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது என்றும் அது என்னுடைய தனிப்பட்ட வியாபாரம் அல்ல என்றால் சரியல்ல.

தாவா B அட்டவணை சொத்தான திருக்கோவிலூர் ஆயில் மில்ஸ் லிமிடெட் எத்தனை சர்வே எண்களில் அமைந்துள்ளது என்றால் 3 சர்வே எண்களில் அமைந்துள்ளது. அந்த இடம் யார் பெயரில் உள்ளது என்றால் திருக்கோவிலூர் ஆயில் மில்ஸ் லிமிடெட் பெயரில் உள்ளது. அதில் என் தந்தை கிஷன்லால் நீண்ட நாள் இயக்குநராக இருந்தார். அதில் 400 பங்குதாரர்கள் இருந்தார்கள். அதில் என் தந்தைக்கு எத்தனை பங்குகள் வைத்திருந்தார் என்றால் சுமார் 500 பங்குகளுக்கு மேல் வைத்திருந்தார். அதில் பார்சிபாய்க்கு 200க்கு மேல் பங்குகள் இருந்தது. ரூப்சந்த் என்பவருக்கு இருந்தது. எவ்வளவு பங்குகள் என்று எனக்கு தெரியாது. அதில் ராஜா என்பவருக்கு பங்குகள் இருந்ததா என்று எனக்கு தெரியாது. என்னுடைய தந்தை மற்றும் பார்சிபாய் ஆகியோர் பெயரில் இருந்த பங்குகளுக்கு அவர்களது வாரிசுகள் அனைவரும் உரியவர்கள் என்றால் சரிதான். ராஜஸ்தானில் உள்ள C– அட்டவணை சொத்து நான் இளவராக இருந்தபோது என் பெயரில் வாங்கப்பட்ட சொத்து. அப்போது எனக்கு வயது 13. அந்த சொத்து எந்த வருடம் வாங்கப்பட்டது என்றால் 1966 –ல் வாங்கப்பட்டது. அந்த கிரைய ஆவணத்தில் என்னுடைய கார்டியனாக என் தந்தை கையொப்பம் செய்துள்ளார். அந்த சொத்து ரூ. 2000 – ற்கு கிரையம் பெறப்பட்டது. அதற்கான தொகையை என் தாய் வழி பாட்டி கொடுத்தார். அந்த கிரைய ஆவணத்தில் என் பாட்டி பணம் கொடுத்துதான் அந்த சொத்து வாங்கப்பட்டது என்று அந்த கிரைய ஆவணத்தில் உள்ளதா என்றால் அதுபோல எந்த ஆவணத்திலும் எழுதுவது வழக்கம் அல்ல. அந்த சமயத்தில் கிரைய தொகையை யார் விற்பனை செய்தவரிடம் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரிதான். அதன்பின்னர் என் பாட்டி பணம் கொடுத்தார் என்று எப்பொழுது தெரியவந்தது என்றால் ஆவணத்தை பாட்டி என்னிடம் கொடுக்கும்போது தெரியவந்தது. அந்த கிரையம் வாங்குவதற்கு என் பாட்டி பணம் கொடுத்ததாக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பதிலுரையில் ராஜஸ்தான் சொத்தை விற்பனை செய்ததை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலும் விற்பனை செய்ததை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். என் தந்தை கிஷன்லால் வாங்கிய சொத்திற்கு நான் தனிப்பட்ட

உரிமை கோர முடியாது என்றால் என் பெயரில் வாங்கியதால் நான்தான் உரிமையாளர். நான் மைனராக இருந்தபோது என் தந்தை குடும்ப நலனுக்காக வாங்கிய சொத்து என்று சொன்னால் சரியல்ல. என் வீட்டில் நான்தான் மூத்த மகன். எடக்கல் கிராமத்தில் உள்ள D – அட்டவணை சொத்தில் எனக்கு பாகம் வேண்டுமா என்றால் எனக்கு வேண்டாம். வாதி கோரியவாறு தாவாசொத்துக்கள் சம்மந்தமாக பாகம் பிரித்து கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. A – அட்டவணை வியாபாரம் எனக்கு மட்டும் சொந்தமானது என்று சொல்வது சரியல்ல என்றால் சரியல்ல. B– அட்டவணை வாதிகளுக்கும் பங்கு உண்டு என்றால் அது பொது சொத்து எல்லாருக்கும் பங்கு உண்டு. C– அட்டவணை சொத்தில் வாதிகளுக்கு எந்த உரிமையும் கிடையாது.

**<u>8 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

D – அட்டவணை சொத்தான எடக்கல் சொத்து என் தந்தை சுயமாக கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். அந்த சொத்து சம்மந்தமாக என் தந்தை ரூப்சந்திற்கு ஒரு உயில் எழுதிவைத்தார் என்றால் அதைப்பற்றி தெரியாது. என் தந்தையின் இறப்பிற்கு பின் அந்த சொத்தை ரூப்சந்த் அனுபவித்து வந்தார் என்றால் அதைப்பற்றி தெரியாது. அந்த சொத்து சம்மந்தமாக ரூப்சந்த் 6ம் பிரதிவாதி ராஜா என்பவருக்கு ஒரு பொது அதிகாரப்பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் அதைப்பற்றி தெரியாது. மேற்படி ராஜா அந்த சொத்தை 7ம் பிரதிவாதி முருகன் என்பவருக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் அதைப்பற்றி தெரியாது. மேற்படி சொத்தை 8ம் பிரதிவாதி மதுக்கான் கிரானைட் பெயருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் அதைப்பற்றி தெரியாது. தற்போது அந்த சொத்தை 8ம் பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் அதைப்பற்றி தெரியாது. 8ம் பிரதிவாதிதான் அதன் உரிமையாளர் என்று சொன்னால் அதைப்பற்றி தெரியாது. எனக்கும் வாதிகளுக்கும்

D – அட்டவணை சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் அதைப்பற்றி தெரியாது.

Taken down by me in Open Court read over to the witness and acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.